# ரோமில் அப்போஸ்தலனாகிய பவுல்



**மனன வசனம்**

**உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தம் ஆகிறதினாலே, முதலாவது நான் உங்கள் எல்லாருக்காகவும் இயேசுகிறிஸ்து மூலமாய் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ரோமர் 1:8.**

**ஆராய்ச்சிக்கு**

**ரோமர் 15:20-27; அப் 28:17-31; பிலிப்பியர் 1:12; ரோமர் 1:7 எபேசியர் 1; ரோமர் 15:14.**

செப்டம்பர் 30 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

ரோமர் புத்தகத்தை ஆராய்கிறவர்கள் அதன் வரலாற்றுப் பின்னணியை அறிந்திருப்பது அவசியம். தேவ வார்த்தையைப் புரிந்துகொள்ள, அது சொல்லப்பட்ட சூழ்நிலையை அறிந்திருக்க வேண்டியது எப்போதுமே முக்கியம்; அது சொல்கிற பிரச்சனைகளை அப்போதுதான் புரிந்துகொள்ளமுடியும். குறிப்பிட்ட ஒரு காலத்தில் வாழ்ந்த, குறிப்பிட்ட சில கிறிஸ்தவர்களுக்கு, குறிப்பிட்ட காரணங்களுக்காக பவுல் எழுதினார்; அவற்றை அறிந்துகொண்டால், அந்தப் புத்தகத்தின் ஆராய்ச்சியில் அவை நமக்கு மிகுந்த பயனுள்ளவையாக இருக்கும்.

அந்தக் காலக்கட்டத்திற்குச் செல்வோமா? முதல் நூற்றாண்டு ரோமுக்குச் சென்று, அங்குள்ள சபையின் அங்கத்தினர்களாக மாறி, பவுல் சொல்லும் வார்த்தைகளைக் கேட்போம். ரோமின் விசுவாசிகளுக்கு அறிவிக்கும்படி பரிசுத்த ஆவியானவர் பவுலுக்குத் தந்த வார்த்தைகளை ஆராய்வோம்.

பவுல் இந்நிருபத்தில், ரோம் விசுவாசிகளோடு சம்பந்தப்பட்ட பல விஷயங்களை பேசினாலும், '**ஒருவர் எவ்வாறு இரட்சிக்கப்படுகிறார்?**' என்பதே அவற்றின் அடிப்படைக் கேள்வியாகும். இது உலகளாவிய ஒரு கேள்வி. பவுல் ஒரு குறிப்பிட்ட மக்களுக்கு, ஒரு குறிப்பிட்ட விஷயத்தை மனதில்வைத்து இந்நிருபத்தை எழுதினார் என்பது உண்மைதான். ஆனாலும் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, முற்றிலும் வித்தியாசமான ஒரு காலத்திலும் சூழ்நிலையிலும் வாழ்ந்த மார்டின் லூதருக்கும் அவை பொருத்தமாக இருந்தன. இன்று நமக்கும்கூட அவை பொருத்தமாக உள்ளன.

2017, அக்டோபர் 7 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## அப்போஸ்தலனாகிய பவுலின் நிருபம்

கொரிந்துவுக்கு அருகாமையில் இருந்த கெங்கிரேயா என்கிற கிரேக்க பட்டணத்திலிருந்து இந்நிருபத்தை பவுல் எழுதியதாகத் தெரிகிறது. ரோமர் 16:1,2. கொரிந்தியாவின் ஒரு பகுதி கெங்கிரேயா. கொரிந்துவும் அதைச் சுற்றியிருந்த பகுதிகளும் சேர்ந்து கொரிந்தியா என்று அழைக்கப்பட்டது. கெங்கிரேயாவைச் சேர்ந்த பெபேயாளைக் குறிப்பிடுவதால், அந்தப் பட்டணத்திலிருந்து ரோமர் நிருபத்தை அவர் எழுதியிருக்க வேண்டும்.

நிருபம் எழுதப்பட்ட காலத்தைக் கண்டறியவே, அது எங்கிருந்து எழுதப் பட்டதென்பதை ஆராய்கிறோம். ஒரு குறிப்பிட்ட சமயத்தில் பவுல் எங்கிருந்தார் என்பதை அறிவது, அக்காலக்கட்டத்தைக் கண்டறிய உதவியாக இருக்கிறது.

கி.பி. 49-52 இல், பவுல் தன் இரண்டாம் நற்செய்திப் பயணத்தின்போதுதான் கொரிந்துவில் சபையை ஸ்தாபித்தார். அப் 18:1-18. கி.பி. 53-58 இல், தன் மூன்றாம் பயணத்தில் மீண்டும் அவர் கொரிந்து செல்கிறார். அப் 20:2,3. அங்கிருந்து கிளம்புவதற்குமுன்பாக எருசலேமிலிருந்த பரிசுத்தவான்களுக்காக காணிக்கை வாங்குகிறார். ரோமர் 15:25,26. எனவே, கி.பி. 58 இன் ஆரம்ப மாதங்களில் ரோமருக்கு அவர் தன் நிருபத்தை எழுதியிருக்கலாம்.

***மூன்றாம் நற்செய்திப் பயணத்தில் பவுல் வேறு எந்தச் சபைகளைச் சந்தித்தார்? அப் 18:23.***

தான் கலாத்தியாவில் இல்லாத சமயத்தில், கள்ளப்போதகர்கள் அங்குச் சென்று, விருத்தசேதனம்பண்ணுவதும், மோசேயின் பிரமாணங்களைக் கைக்கொள்வதும் அவசியமென அங்கிருந்த விசுவாசிகளை நம்பவைத்ததுபற்றி பவுல் அறிந்தார். தான் ரோமுக்குச் செல்லும் முன்பாக இந்தக் கள்ளப்போதகர்கள் ரோமுக்கும் செல்லக்கூடுமெனப் பயந்து, ரோமிலும் அதே நிலை உண்டாகாமல் தடுப்பதற்கு, அங்குள்ளவர்களுக்கு ஒரு நிருபத்தை (ரோமர் நிருபம்) எழுதுகிறார். தன்னுடைய மூன்றாம் நற்செய்தி பயணத்தில் மூன்று மாதங்கள் கொரிந்துவில் பவுல் தங்கியிருந்தார். அங்கு அவர் இருந்த நாட்களில்தான் கலாத்தியருக்கும் அவர் நிருபத்தை எழுதியிருக்கலாமென சிலர் நம்புகிறார்கள்.

'ரோமருக்கு எழுதும் நிருபத்தில், நற்செய்தியின் மகத்தான நியதிகளை பவுல் முன்வைக்கிறார். யூத மற்றும் புறஜாதியாரின் சபைகளில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்திய கேள்விகளுக்கு தன்னுடைய பதிலை மிகத்தெளிவாகக் கூறுகிறார்; ஒருசமயத்தில் யூதர்களுக்கு மட்டுமே சொந்தமாயிருந்த நம்பிக்கைகளும் வாக்குறுதிகளும் இப்போது புறஜாதியாருக்கும் அருளப்பட்டிருக்கிறதெனக் காட்டுகிறார்.' - *EGW, AA, p 373.*

என்னென்ன கேள்விகள் யூதச் சபைகளிலும் புறஜாதியாரின் சபைகளிலும் குழப்பத்தை உண்டாக்கின என்பதை அறிவது முக்கியம். அடுத்த வாரப் பாடத்தில் இந்தக் கேள்விகளைபற்றிப் பார்ப்போம்.

தற்சமயம் என்னென்ன பிரச்சனைகள் உங்களுடைய சபையில் காணப்படுகின்றன? இவை சபைக்கு உள்ளிருந்து எழுந்தனவா, வெளியேயிருந்து வந்தனவா? இதில் உங்கள் பங்கு, நிலை, மனப்பாங்கு என்ன? ஆராய்ந்துபார்த்திருக்கிறீர்களா?

## ரோமுக்குச் செல்ல விரும்பிய பவுல்

தனிப்பட்ட விதத்தில் சந்திப்பதே பெரும்பாலும் வெற்றிகரமான சந்திப்பாக இருக்கும். தொலைபேசி, மின்னஞ்சல், குறுஞ்செய்தி, ஸ்கைப் போன்றவை இருந் தாலும், முகமுகமாக நேரடியாகச் சந்திப்பதே மிகச்சிறந்த தகவல்தொடர்பாகும். அத னால்தான், ரோமச் சபையாருக்கு எழுதும்போது, அவர்களை முகமுகமாகச் சந் திக்க விரும்புவதாகக் கூறுகிறார். தான் அங்குச் செல்லவிருந்த காரணத்தையும் அவர்கள் அறியவேண்டுமென்று விரும்பினார்.

**இதற்குமுன் தான் ரோமுக்குச் செல்லாமல் இருந்ததற்கு என்ன காரணங்களை பவுல் கூறுகிறார்? *ரோமர் 15:20-27.* பிறகு அங்குச் செல்ல அவர் தீர்மானித்ததற்கான காரணம் என்ன? அதில் நற்செய்தி ஊழியம் எவ்வளவு தூரம் மையமாக இருந்தது? பவுல் சொல்வதிலிருந்து ஊழியப் பணிபற்றியும், சாட்சிபகர்தல்பற்றியும் நாம் என்ன அறியலாம்? யூதர்கள் மற்றும் புறஜாதியார்கள் பற்றி *ரோமர் 15:27* இல் என்ன முக்கியக் கருத்தை பவுல் கூறுகிறார்?**

---

---

நற்செய்தி அறிவிக்கப்படாத இடங்களில் நற்செய்தியை அறிவிக்கவே பவுல் எப்போதும் விரும்பினார்; ஏற்கனவே நற்செய்தி அறிவிக்கப்பட்ட இடங்களில் மற்றவர்கள் சென்று ஊழியம்செய்ய விட்டுவிட்டார். கிறிஸ்தவ மார்க்கத்தின் ஆரம்ப நாட்களில், ஊழியர்கள் அதிகமில்லாத காலக்கட்டத்தில், ஏற்கனவே நற் செய்தி அறிவிக்கப்பட்டிருந்த இடங்களில் ஊழியஞ்செய்வது, ஒப்பற்ற ஊழியப் பணியின் ஆற்றலை வீணடிப்பதாக இருந்தது. அதனால்தான், '*கேள்விப்படாதி ருந்தவர்கள் உணர்ந்துகொள்வார்களென்று எழுதியிருக்கிறபடி*' நிகழவேண்டும்; அதனால், '*நான் மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டாதபடிக்கு கிறிஸ்து வினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன்*'' என்கிறார். ரோமர் 15:20,21.

ரோமிலேயே தங்கிவிடுவது பவுலின் நோக்கம் அல்ல. ஸ்பெயினில் சுவி சேஷத்தை அறிவிக்கவேண்டும் என்பதே அவருடைய விருப்பம். இந்த முயற்சி வெற்றிபெற, ரோமிலிருந்த கிறிஸ்தவர்களின் உதவியை நாடினார்.

**புதிய ஒரு பகுதியில் சுவிசேஷத்தை அறிவிக்க பவுல் விரும்பினார்; ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட் டிருந்த ஒரு சபையிலிருந்து அதற்கான உதவியை எதிர்பார்த்தார். ஊழியப்பணி சம்பந்தப்பட்ட என்னவொரு முக்கிய நியதியை இதிலிருந்து அறியலாம்?**

---

---

ரோமர் 15:20-27ஐ மீண்டும் வாசியுங்கள். ஊழியம் மற்றும் சேவையில் பவுல் எவ்வளவு வாஞ்சையுள்ளவராக இருந்திருக்கிறார்! என்னென்ன விஷயங்கள் உங்களை ஊக்கமூட்டி, செயல்படவைக்கின்றன? உங்களில் எவ்வளவு சேவைமனப்பான்மை காணப்படுகிறது?

## ரோமில் பவுல்

***'நாங்கள் ரோமாபுரியில் சேர்ந்தபோது, நூற்றுக்கு அதிபதி தன் காவலிலிருந்தவர்களைச் சேனா பதியினிடத்தில் ஒப்புக்கொடுத்தான்; அப்பொழுது பவுல் தன்னைக் காத்திருக்கிற சேவகனுடனே தனித்துக் குடியிருக்கும்படி உத்தரவு பெற்றுக்கொண்டான்.' அப் 28:16. பவுல் எவ்வாறு ரோமைச் சென்றடைந்ததாக இங்குக் கூறப்படுகிறது? நமக்கு நேரிடுகிற விரும்பத்தகாத, எதிர்பாராத நிகழ்வுகள்பற்றி இதிலிருந்து என்ன பாடம் கற்றுக்கொள்ளலாம்?***

---

---

ஆம், பவுல் ஒரு சிறைக்கைதியாக ரோமை அடைந்தார். மிகச்சிறந்த நோக்கங்களோடுதான் திட்டங்களைப் போட்டிருப்போம். ஆனால், எத்தனை சமயங்களில் நம்முடைய எதிர்பார்ப்பும் விருப்பமும் நாம் திட்டமிட்டவிதத்தில் நடக்காமல் போய்விடுகின்றன!

தன்னுடைய மூன்றாம் நற்செய்திப் பயணத்தை முடித்து, பவுல் எருசலேம் வந்தார்; அப்போது தரித்திரருக்காக ஐரோப்பா மற்றும் ஆசியா மைனர் நாடுகளில் தான் சேகரித்திருந்த காணிக்கையையும் கொண்டுவந்திருந்தார். ஆனால், எருசலேமில் அவர் கைதுசெய்யப்பட்டு, சங்கிலியில் கட்டப்பட்டார். செசரியாவில் இரண்டு வருடங்கள் சிறையில் அடைபட்டிருந்தவர், ராயருக்கு அபயமிட்டார். தான் கைதுசெய்யப்பட்டு மூன்று வருடங்கள் கழித்து, ரோமை அடைந்தார். ஆனால் ரோமச் சபையினரை தான் சந்திக்க வரவிருப்பதாக முன்னர் பவுல் எழுதியிருந்தாரே, அந்தச் சந்திப்பானது பவுல் நினைத்தவிதத்தில் நடைபெறவில்லை.

***ரோமில் பவுல் என்னென்ன செய்ததாக அப் 28:17-31 வசனங்கள் கூறுகின்றன? இதில் நமக்குள்ள படிப்பினை என்ன?***

---

---

"பவுலின் பிரசங்கங்கள் அல்ல, அவருடைய கட்டுகள்தாம் விசாரணை மன்றத்தினரின் கவனத்தை கிறிஸ்தவமார்க்கத்திற்கு நேராகத் திருப்பின. அநேக ஆத்துமாக்களின் பாவ அடிமைத்தனக் கட்டுகளை ஒரு சிறைக்கைதியாக இருந்த நிலையில்தான் அவர் தகர்த்தார். அது மட்டுமல்ல. 'சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன்கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள்' என்றும் சொன்னார். பிலிப்பியர் 1:14."
- *EGW, AA, p 464.*

---

உங்கள் வாழ்க்கையில் எதிர்பாராத திருப்பங்கள் உண்டாகி, கடைசியில் நன்மையாக முடிந்த சம்பவங்களை எத்தனைமுறை சந்தித்திருக்கிறீர்கள்? பிலி 1:12. எந்த நன்மையும் உண்டாக வாய்ப்பில்லாததுபோல தோன்றும்போது, தேவன்மேல் நம்பிக்கையோடு இருப்பதற்கு அந்த அனுபவங்களிலிருந்து எவ்வாறு விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ளலாம்?

*'ரோமாபுரியிலுள்ள தேவப்பிரியரும் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்ட வர்களுமாகிய அனைவருக்கும் எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக'* **என்று பவுல் வாழ்த்துகிறார். *ரோமர் 1:3.* சத்தியம், வேதாகமக் கருத்து, விசுவாசம்பற்றிய என்ன நியதிகள் இந்த வார்த்தைகளில் காணப்படுகின்றன?**

**தேவப்பிரியர்**. உலகத்தாரை தேவன் நேசிப்பது உண்மைதான். ஆனால், தம் மைத் தெரிந்துகொண்டவர்களை, தம்முடைய அன்பை ஏற்றுக்கொண்டவர்களை விசேஷ விதத்தில் அவர் நேசிக்கிறார். உலக ரீதியாக இதைப் பார்ப்போம். நாமும் நம்மேல் அன்புகூருகிறவர்கள்மேல் விசேஷித்த அன்புகாட்டுவோம்; அவர்களோடு நமக்கு ஒரு பாச பரிமாற்றம் இருக்கும். திரும்ப அன்பு காட்டப்படாவிட்டால், முழுதளவில் அன்பை வெளிப்படுத்த முடியாது.

**பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்கள்**. சில மொழிபெயர்ப்புகளில் 'ஆகும்படி' என்பதற்கான ஆங்கில வார்த்தைகள் சாய்வெழுத்துகளில் கொடுக்கப் பட்டுள்ளன; அதாவது, மொழிபெயர்த்தவர்கள் அந்த வார்த்தையைப் பயன் படுத்தியுள்ளார்கள். இந்த வார்த்தைகள் இல்லாமலும்கூட அர்த்தம் மாறாது. அந்த வார்த்தைகள் இல்லாவிட்டால், 'அழைக்கப்பட்ட பரிசுத்தவான்கள்', அதாவது, 'குறிக்கப்பட்ட பரிசுத்தவான்கள்' என்று வரும்.

**ஹகியாய்** என்கிற கிரேக்க வார்த்தை 'பரிசுத்தவான்கள்' என்று மொழிபெயர்க் கப்பட்டுள்ளது. பரிசுத்தம் என்றால் 'தத்தம்செய்யப்பட்டது' என்று அர்த்தம். தேவன் 'பிரித்து எடுக்கிற' ஒருவர்தான் பரிசுத்தவான். அவர் ஆணாக அல்லது பெண்ணாக இருக்கலாம்; ஆவிக்குரிய வளர்ச்சிபெற இன்னும் நீண்ட அனுப வத்தைக் கடக்க வேண்டியிருக்கலாம். ஆனால் வேதத்தின்படி, ஒருவர் இயேசுவை தன் ஆண்டவராக ஏற்றுக்கொண்டிருப்பதே அவரைப் பரிசுத்தவானாக்குகிறது.

**'பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்கள்' என்று பவுல் கூறுகிறார். அப்படியானால், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்படாதவர்களும் இருக்கிறார்களா? பவுல் சொல்வதைப் புரிந்துகொள்ள *எபே 1:4; எபி 2:9; 2பேதுரு 3:9* ஆகிய வசனங்கள் எவ்வாறு உதவுகின்றன?**

இறுதி நரக அக்கினியை சாத்தானுக்கும் அவன் தூதர்களுக்குமே ஆயத்த மாக்குகிறார். மத் 25:41. மனிதர் ஒவ்வொருவருக்காகவும் கிறிஸ்து மரித்தார் என்பதுதான் நற்செய்தியின் மகத்துவம். அவருக்குள் இரட்சிக்கப்படுவதற்காக, அனைவரும் 'பரிசுத்தவான்களாகும்படி' உலகத்தோற்றத்திற்கு முன்னரேயே தேவன் திட்டமிட்டிருக்கிறார். மனிதர்கள் அனைவரும் இயேசுவில் இரட்சிக்கப்படு வதே தேவனுடைய ஆதி நோக்கம். இந்த ஈவை சிலர் ஏற்க விரும்பாததால், இந்த ஈவு ஒழிந்து போகப்போவதில்லை. இது, சந்தைவெளியில் உண்ணாவிரதம் இருப்பவர் அங்குள்ள உணவுப்பொருட்களைச் சாப்பிடாமல் இருப்பது போன்றது.

தேவனுக்குள் நீங்கள் இரட்சிப்பைக் கண்டடைய உலகத்தோற்றத்துக்கு முன்னரே அவர் உங்களை அழைத்திருக்கிறார். அந்த அழைப்புக்கு நீங்கள் செவிசாய்க்காமல் உங்களை ஏதாவது தடுப்பதற்கு நீங்கள் அனுமதிக்கலாமா?

## ரோமின் விசுவாசிகள்

*உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாகிறதினாலே, முதலாவது நான் உங்களெல்லாருக்காகவும் இயேசுகிறிஸ்து மூலமாய் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ரோமர் 1:8.*

ரோமில் சபை எவ்வாறு ஸ்தாபிக்கப்பட்டதென்பது தெரியவில்லை. பேதுரு அல்லது பவுல் ஸ்தாபித்திருக்கலாம் என்பதற்கு வரலாற்று ஆதாரம் இல்லை. எருசலேமில் பெந்தெகொஸ்தே நாளின்போது மனமாறினவர்கள் ரோமுக்குச் சென்றிருந்தபோது, அல்லது ரோமில் குடியேறியபோது அங்குச் சபையை ஸ்தாபித்திருக்கலாம். அல்லது, பின் நாட்களில் மனமாறி ரோமுக்குச் சென்றவர்கள், தலைநகரத்தில் தங்கள் விசுவாசத்தைப் பகர்ந்திருக்கலாம்.

பெந்தேகொஸ்தே நாளிலிருந்து பத்து-இருபது வருடங்களில் ஸ்தாபிக்கப்பட்ட அந்தச் சபையை அப்போஸ்தலர் யாரும் சந்தித்திராதபோதிலும், அந்தச் சபையானது பரவலாக எல்லாருக்கும் தெரிந்திருந்தது. 'எதிர்ப்பு இருந்தாலும், கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதிலிருந்து இருபது வருடங்களில் ரோமில் உயிருள்ள, ஊக்கமான சபை உருவாகியிருந்தது. இந்தச் சபை வலுவான, வாஞ்சைமிக்கசபையாக இருந்தது; ஆண்டவர் அதை ஏற்படுத்தினார்.' *EGW, 6SDABC, p 1067.*

இங்கு 'விசுவாசம்' என்பது உண்மையான வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் குறிப்பிடுகிறது. கிறிஸ்துவுக்குள் தாங்கள் கண்டுகொண்ட புதிய வாழ்க்கையை முற்றிலும் உண்மையோடு அவர்கள் வாழ்ந்தார்கள்.

***ரோமர் 15:14இல் ரோம சபையை பவுல் எவ்வாறு விவரிக்கிறார்?***

ரோமக் கிறிஸ்தவர்களின் அனுபவத்தில் காணப்பட்ட மூன்று நல்ல விஷயங்களை பவுல் இங்குப் பட்டியலிடுகிறார்.

**1. 'நற்குணத்தினால் நிறைந்தவர்கள்.'** நம்மைக் குறித்து மற்றவர்கள் இப்படிச் சொல்லமுடியுமா? நம்மில் நிறைந்திருக்கும் நற்குணம் மட்டுமே பிறரின் கவனத்தை ஈர்க்கமுடியும்.

**2. 'சகல அறிவினாலும் நிரப்பப்பட்டவர்கள்.'** அறியாமை அகலவேண்டும், அறிவையும் தகவல்களையும் பெறவேண்டும் என்று வேதாகமம் அதிகமாக வலியுறுத்துகிறது. கிறிஸ்தவர்கள் வேதாகமத்தை ஆராயவேண்டும்; அதன் போதனைகளை நன்கு அறியவேண்டும். 'உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுப்பேன்' என்றால், 'உங்களுக்கு புதிய இருதயத்தைக் கொடுப்பேன்' என்று அர்த்தம். இருதயம் மாறியிருந்தால், கிறிஸ்தவக் கடமைகுறித்த தெளிவான உணர்வு இருக்கும்; அதாவது, சத்தியம்பற்றிய புரிந்துகொள்ளுதலும் இருக்கும். *EGW, MLT, p. 24.*

**3. 'ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வல்லவர்கள்.'** சக விசுவாசிகளிடமிருந்து பிரிந்திருக்கும் ஒருவர் ஆவிக்குரிய வாழ்வில் வளரமுடியாது. மற்றவர்களையும் ஊக்கப்படுத்தவேண்டும்; மற்றவர்களும் நம்மை ஊக்குவிக்கவேண்டும்.

உங்களுடைய சபை எத்தகைய பெயரைப் பெற்றிருக்கிறது? இதில் சொல்லப்படும் குணங்களில் ஒன்றாவது காணப்படுகிறதா? உங்கள் சபையைப்பற்றி உங்கள் பதில் சொல்வது என்ன? இந்த நிலை மேம்படுவதற்கு நீங்கள் என்ன செய்யலாம்?

## மேலும் படிக்க:

"மனிதருக்கான இரட்சிப்பின் திட்டம் என்பது, பாவம் நுழைந்து எதிர்பாராத நிகழ்வுகள் உண்டானபிறகு தேவன் யோசித்து, ஏற்பாடுசெய்ததல்ல. மாறாக, உலகத்தோற்றத்திற்கு முன்பே மனிதனின் மீட்பிற்காக தேவன் போட்டிருந்த திட்டம் இது. மனிதர்மேல் தேவன் வைத்திருந்த நித்திய அன்பால் இது உருவானது. (எரே 31:3).

" ஆதிகாலம்முதல் இதுவரை நடந்தவைகளும், இப்போது நடப்பவைகளும், இனி நித்தியகாலமாக நடக்கப்போகிறவைகளும் இந்தத் திட்டத்தில் சம்பந்தப்பட்டிருக்கின்றன. தேவனுடையபரிசுத்தஜனங்களாக முன்குறிக்கப்பட்டுதேர்ந்தெடுக்கப்படுதல், கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாகுதல், மீட்பும் பாவமன்னிப்பும் பெறுதல், கிறிஸ்துவுக்குள் அனைவரும் ஐக்கியமாகுதல், பரிசுத்த ஆவியால் முத்தரிக்கப்படுதல், நித்திய சுதந்தரத்தைப் பெறுதல், மகிமையடைதல் (எபே 1:3–14) போன்ற ஆசீர்வாதங்கள் அதில் அடங்கும். இந்தத் திட்டத்தின் மையமாக இயேசுவின் பாடும் மரணமும் உள்ளன; இவை வரலாற்றில் விபத்தாலோ, மனிதர்களாலோ நிகழ்ந்தவை அல்ல; மாறாக, தேவனுடைய மீட்பின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ந்தவை. அப் 4:27, 28. மெய்யாக இயேசுவே 'உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி' ஆவார். வெளி 13:8." – *The Handbook of Seventh-day Adventist Theology (Hagerstown, Md.: Review and Herald® Publishing Association, 2000), pp. 275, 276.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *புரொட்டஸ்டன்ட் சீர்திருத்தம்பற்றி வகுப்பில் கலந்தாலோசியுங்கள். அந்தச் சீர்திருத்தம் உண்டாகியிருக்காவிட்டால் உலகம் எவ்வளவுக்கு வித்தியாசமானதாக இருந்திருக்கும்?*

2. *நாம் இரட்சிப்பை அடையும்படி உலகத்தோற்றத்திற்கு முன்னரே அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதின் அர்த்தம் என்ன? தீத்து 1:1,2; 2தீமோ 1:8,9. இந்த உண்மையால் எப்படிப்பட்ட ஊக்கத்தை நாம் பெறமுடியும்? எல்லா மனிதர்களையும் தேவன் நேசிப்பதுபற்றி என்ன தெரிகிறது? அப்படியானால், கிருபையாக தங்களுக்கு அருளப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ளாமல் மக்கள் விலகி ஓடுவது எவ்வளவு வேதனையானது?*

3. *வியாழக்கிழமை பாடத்தின் கடைசிக் கேள்வியைத் தியானியுங்கள். உங்கள் சபையின் நன்மதிப்பு அதிகரிக்க நீங்கள் என்ன செய்யலாம்?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெர்ட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Hope TV India

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*